benevolent

# 40. கல்வி

(கற்கத் தக்க நூல்களைப் படித்தல்)

## Learning

391. கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.

ஒழுக்கத்தையும், பண்பாட்டையும் உருவாக்கும் நூல்களைத் தன் குறைகள் நீங்கும் வண்ணம் ஒருவர் விரும்பிக் கற்க வேண்டும். கற்றால் அதற்கு ஏற்றவாறு அவற்றை வாழ்வில் கடைப்பிடித்து நடக்க வேண்டும்.

**So learn that you may full and faultless learning gain,**
**Then in obedience meet to lessons learnt remain.**

Let a man learn thoroughly whatever he may learn, and let his conduct be worthy of his learning.

392. எண்என்ப ஏனை எழுத்(து)என்ப இவ்விரண்டும்
கண்என்ப வாழும் உயிர்க்கு.

என்றும் பயன் தரும் கணக்கு முதலாய அறிவியல் நூல்களும் இலக்கண இலக்கிய நூல்களும் எண்ணும் எழுத்தும் என்று சான்றோரால் போற்றப் பெறுவனவாம். புகழ்மிக்கவராக வாழும் மக்களுக்கு அவையே கண்களாக விளங்குகின்றன.

**The twain that lore of numbers and of letters give**
**Are eyes, the wise declare, to all on earth that live.**

Letters and numbers are the two eyes of man.

393. கண்உடையர் என்பவர் கற்றோர் முகத்(து)இரண்டு
புண்உடையர் கல்லா தவர்.

கண் உடையவர் என்று சான்றோரால் போற்றிப் பாராட்டப்படுபவர் கற்றறிந்தவரே! கல்லாதவர் முகத்தில் இரண்டு கண்களைப் பெற்றிருந்தாலும், புண்ணுடையவர் என்றே கருதப்படுவர்!

**Men who learning gain have eyes, men say;**
**Blockheads' faces pairs of sores display**

The learned are said to have eyes, but the unlearned have (merely) two sores in their face.

394. உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்.

மகிழத் தக்கவாறு உறவாடிப் பழகுவதும் நினைந்து உருகுமாறு பிரிந்து செல்வதும் அறிவிற் சிறந்த சான்றோர் செயலாகும். எப்பொழுதும் இன்பம் தரும் இனிய சொல்லாடி மகிழ்வது புலவர் செயலாகும்!

**You meet with joy, with pleasant thought you part;**
**Such is the learned scholar's wonderous art.**

It is the part of the learned to give joy to those whom they meet, and on leaving, to make them think (Oh! when shall we meet them again.).

395. உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார்
கடையரே கல்லா தவர்.

அறிவு மிக்கவர் முன்னர் - அறிவில்லாதவர், அறிஞர் பெருமக்களைப் போன்று அறிவுடையவராக வேண்டும் என்னும் ஆர்வத்தால் - பணிந்து நின்று கற்பர். அவ்வாறு பணிந்து கல்லாதவர் கடைநிலை மாந்தராவார்!

**With soul submiss they stand, as paupers front a rich man's face;**
**Yet learned men are first; th'unlearned stand in lowest place.**

The unlearned are inferior to the learned, before whom they stand begging, as the destitute before the wealthy.

396. தொட்டனைத்(து) ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத்(து) ஊறும் அறிவு.

தோண்டும் அளவுக்கு ஏற்பச் சிறு குளமாகிய மணல் ஊற்றில் நீர் பெருகும். அதுபோன்று மக்கள் தொடர்ந்து படிக்கும் அளவுக்கு ஏற்றவாறு அறிவு பெருகும்!



**In sandy soil, when deep you delve, you reach the springs below;**
**The more you learn, the freer streams of wisdom flow.**

Water will flow from a well in the sand in proportion to the depth to which it is dug, and knowledge will flow from a man in proportion to his learning.

397. யாதானும் நாடாமால் ஊராமால் என்ஒருவன்
சாந்துணையும் கல்லாத வாறு.

கல்வியறிவால் சிறந்து விளங்கும் சான்றோர்க்கு எந்த நாடும் சொந்த நாடாகும்! எந்த ஊரும் சொந்த ஊராகும்! கல்வியால் இத்தகைய சிறப்பு வரும்போது, ஒருவன் தான் சாகும் வரையில் கற்காமல் காலம் கழித்தலாகாது!

**The learned make each land their own, in every city find a home;**
**Who, till they die; learn nought, along what weary ways they roam.**

How is it that any one can remain without learning, even to his death, when (to the learned man) every country is his own (country), and every town his own (town) ?

398. ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்(கு)
எழுமையும் ஏமாப்(பு) உடைத்து.

ஒரு தலைமுறைக் காலத்தில் ஒருவன் கற்கும் கல்வி அறிவானது அவனது ஏழேழு தலைமுறைக்கும் தக்க பாதுகாப்பாகத் திகழும்.

**The man who store of learning gains,**
**In one, through seven worlds, bliss attains.**

The learning, which a man has acquired in one birth, will yield him pleasure during seven births

399. தாம்இன் புறுவ(து) உலகுஇன் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்.

கற்றறிந்த அறிஞர் பெருமக்கள் தாம் இன்புறும் கல்வியால் உலகமும் இன்புறுவதைக் கண்டு மகிழ்ந்து மேன்மேலும் ஆர்வத்துடன் கற்றிட விரும்புவர்.

**Their joy is joy of all the world, they see; thus more**
**The learners learn to love their cherished lore.**



The learned will long (for more learning), when they see that while it gives pleasure to themselves, the world also derives pleasure from it.

400. கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை.

மானிடர்க்கு எத்தகைய தீங்கும் பயவாத சிறந்த செல்வம் கல்விச் செல்வம் ஆகும்! ஏனைய பொன்னும் பொருளும் போகமும் அத்தகைய சிறப்புடையவை ஆகமாட்டா!

**Learning is excellence of wealth that none destroy;**
**To man nought else affords reality of joy.**

Learning is the true imperishable riches; all other things are not riches.